# சுவாமி விபுலானந்தர்

“கடவுள் என் முன் தோன்றினால் எனக்கு முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லாரும் இன்புறும்படி சேவை செய்வதனால், அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால் சேவை செய்ய வரம் தா! என்னும்படியாகக் கேட்பேன்” என்று திருவாய் மலர்ந்தருளிய சுவாமி விபுலானந்த அடிகளின் நினைவு பசுமையாக உலகெங்கும் பதிந்துவிட்டது.

1892ம் ஆண்டு மே மாதம் மட்டக்களப்பு, காரைதீவில் சாமித்தம்பியருக்கும் கண்ணமைக்கும் மகனாகப் பிறந்தார் மயில்வாகனன். இரு சகோதரிகள் இவருடைய உடன்பிறந்தோர்.

10 வயது வரையில் தமிழ் கற்று, வீட்டிலேயே ஆங்கிலமும் கற்றுவந்தார். 12ம் வயதிலேயே செய்யுள் இலக்கணம் கற்று, செய்யுள் இயற்றுவதை ஓய்வுநேரப் பொழுதுபோக்காகக் கொண்டார். தாய் வழியே திருமாபத்தினி கண்ணகியை குலதெய்வமாக வழிபட்டு, புலோலி வைத்தியலிங்க தேசிகரிடம் தமிழ் நூல்களைக் கற்றார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சீனியர் தேர்வில் முதல் மாணவனாக, சங்க இலக்கியங்களைக் கற்றவர்களில் திறனாக, பொறியியற் கல்லூரி தேர்வில் ஒருவருட காலத்துக்குள் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றார். அதன்பின் லண்டன் பி.எஸ்.ஸி. தேர்வில் தாமாகவே பயின்று முதல் ஸ்தானத்தில் தேர்ச்சியடைந்தார் மயில்வாகனன். சென்னை இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி சர்வானந்தா அவர்களுடைய தொடர்பு மயில்வாகனன் என்ற பெயர் “பிரபோத சைதன்யர்” என்ற ஆச்சிரமப் பெயராக மாறியது.

கீழே - மேலே நாட்டு இலக்கியங்கள், ஆன்மீக சித்தாந்தங்கள் ஆய்வுசெய்து, ஆங்கில கவிகோமான் கீட்ஸ் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கு, மகாகவி கீட்சைப் பாராட்டி, நீண்ட கவிதையை லண்டனுக்கு அனுப்பி, தமிழரின் பெருமையை மேலும் உயர்த்தினார் பிரமச்சாரி “பிரபோத சைதன்யர்”. அவர் அனுப்பிய பாராட்டு, வானளவாய் பாராட்டப்பட்டது.

1924ம் ஆண்டு இராமகிருஷ்ண மடத்தில் பிரமச்சாரி நாமம் மாறி, சுவாமி விபுலானந்தர் என்னும் துறவு நாமத்தை ஏற்றார். தமிழ் புதையல் இருப்பிடமான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவரை, முதல் தமிழ் பேராசிரியராக நியமித்தது.

தேசியவாதியான பேராசிரியர் விபுலானந்த சுவாமி, அங்கு நடந்த பட்டமளிப்பு விழாவிற்கு வந்த ஆளுநர் ஜார்ஜ் பிரடரிக் ஸ்டான்லி வந்தபோது, தன் இல்லத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னமாக Union Jack கொடியைப் பறக்கவிட மறுத்து, பொலிசாரின் எச்சரிக்கையை நிராகரித்தார்.

பாரதியார் பாடல்களை சிறுவர் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தி, இலங்கையில் பாடத்திட்டத்தில் இசைக்கும் பாடத்திட்டத்தை வகுத்தார்.

இமயமலை சாரலில் சுவாமிகளின் யாழ்நூல் ஆய்விற்கு ஒளிவீசிற்று. 1947ம் ஆண்டு யூன் மாதம் 5, 6ம் திகதிகளில் அடிகளின் மாபெரும் படைப்பான "யாழ்நூல்" அரங்கேற்றம் கரந்தைத் தமிழ் சங்கத்தின் ஆதரவில் தமிழ்நாட்டு தமிழ் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அவர் திட்டமிட்டுச் சமைத்த யாழ்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. இலங்கை வானொலியில் தான் முதல் முதலாய் சுவாமிகளின் யாழ் இசை, ஒற்றுமை இசையாக, ஹார்மொனித் தொகுப்பாக ஒலிபரப்பப்பட்டு, அகில இந்திய பாராட்டைப் பெற்றது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வைத்த அடிகளார் யூலை மாதம் இரவு 1 மணி 15 நிமிடமளவில் வீடுபேறடைந்தார். பரமனடியில் பிரகாசிக்கும் தீபஒளி, தமிழர் மனதில் பக்தியையும், தமிழ் அன்பையும் பற்றுதலையும் எப்போதும் தூண்டிவிடும்.

யூலை மாதம் 21ம் திகதி சிவானந்த வித்தியாலய கல்லறையில் சுவாமி விபுலானந்த சுவாமிகள் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

சுவாமிகள் படைத்த "ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று மலர்" என்ற கவிதையில் முதல் மலர் கல்லறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு சிரம் தாழ்த்தி, கரம் குவித்து வணங்குகிறேன்.

"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது."

சுவாமி விபுலானந்த அடிகளின் மணிமொழிகள் வாழ்க, தமிழ் வாழ்க, தமிழ்ப் பாடசாலை வாழ்க!

நன்றி!

வணக்கம்!